DINAMANI 29 NOV 08

# ஈஷா பவுண்டேஷன் சார்பில் 5,000 கிராமங்களில் சுகாதாரத் திட்டம்




சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 'கொல்லைப்புற ரகசியம்' என்ற குறும்பட சி.டி.யை வெளியிடுகிறார் ஈஷா பவுண்டேஷன் நிறுவனர் ஜக்கி வாசுதேவ். உடன் (இடமிருந்து) மா.ஃபா பாண்டியராஜன், ஆச்சி மசாலா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஐசக்.

**சென்னை, நவ. 28:** ஈஷா பவுண்டேஷனும், ஆச்சி மசாலா நிறுவனமும் இணைந்து தமிழகத்தில் உள்ள 5 ஆயிரம் கிராமங்களில் 'ஆரோக்கிய அலை' என்ற பெயரில் சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த உள்ளன.

சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஈஷா பவுண்டேஷனின் நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் இத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இதற்காக தயாரிக்கப்பட்டுள்ள 'கொல்லைப்புற ரகசியம்' என்ற குறும்பட சி.டி.யையும் அவர் வெளியிட்டார்.

'கிராம புத்துணர்வு இயக்கம்' என்ற பெயரில் கிராம முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வரும் ஈஷா பவுண்டேஷன் தற்போது கிராமங்களில் சுகாதார விழிப்புணர்வுப் பணியில் ஈடுபட உள்ளது. "உலக அளவில் இந்தியாவில்தான் ஊட்டச்சத்து குறைவான குழந்தைகள் அதிகமாக உள்ளனர். எனவே 2009-ம் ஆண்டு 5 ஆயிரம் கிராமங்களில் ஆச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆரோக்கிய அலை சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்த ஈஷா திட்டமிட்டுள்ளது. கிராம மக்களுக்கு ஆரோக்கியம் குறித்து பயிற்சி அளிக்க உள்ளோம்" என்று ஜக்கிவாசுதேவ் செய்தியாளர்களிடம் கூறினார். ஆச்சி மசாலா நிறுவனத்தின் ஐசக், ஏ. பத்மாசிங் ஐசக் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.